**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலன் – தோட்டக்கலை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - அறிவிப்பு எண்.33 – தமிழ்நாடு முந்திரி வாரியத்தின் திட்ட செயலாக்கத்திற்காக ரூ.299.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு - வழிகாட்டு நெறிமுறைகள் அங்கீகரித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை**

அரசாணை (நிலை) எண்.243

நாள்:17.09.2025.
திருவள்ளுவர் ஆண்டு 2056,
விசுவாவசு வருடம்,
புரட்டாசித் திங்கள் 1-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள். (அறிவிப்பு எண். 33)
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண்.MIS/5176/2025, நாள்:12.05.2025 மற்றும் 19.06.2025.
3. அரசாணை (நிலை) எண்.231, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 02.09.2025.

*******

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் இன்ன பிறவற்றுள் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

<u>அறிவிப்பு எண்.33-தமிழ்நாடு முந்திரி வாரியம்</u>

> "முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரி சார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கவும், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாடு முந்திரி வாரியம் (Tamil Nadu Cashew Board) ஏற்படுத்தப்படும். இதனால் முந்திரி சாகுபடி செய்யும் உழவர்களும், அதனைச் சார்ந்த தொழில் செய்யும் கிராமப்புர மக்களும் அதிகளவில் பயனடைவார்கள்."

2. மேற்காணும் அறிவிப்பின்படி, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கடலூரைத் தலைமையிடமாகவும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் கொண்டு தமிழ்நாடு முந்திரி வாரியம் மற்றும் நிர்வாகக் குழுவினை அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேற்சொன்ன அறிவிப்பினைத் தொடர்ந்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் தனது கருத்துருவில் முந்திரி வாரியத்தின் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக தோட்டக்கலைத் துறையின் மூலம் முந்திரி வளர்ச்சிக்கென செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் மற்றும் நிதித்தேவை விவரங்கள் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

<u>பரப்பு விரிவாக்கம்</u> - முந்திரி உற்பத்தியினை அதிகரிக்க அதிக மகசூல் தரும் உயர் இரகங்கள், 40% மானியத்தில் முந்திரி பரப்பு விரிவாக்க இனத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம், பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் செயல்படுத்தப்படும். முந்திரி பரப்பு விரிவாக்கம் 1,015 எக்டரில் ரூ.182.70 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்படும்.

<u>பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல்</u> - பழைய தோட்டங்களில் உள்ள முந்திரி மரங்களின் காய்ப்புத்திறனை அதிகரித்திடும் பொருட்டு கவாத்து செய்திடவும், மகசூல் குறைந்த பழைய முந்திரி மரங்களை அகற்றி அதிக விளைச்சல் ஈட்டும் முந்திரி இரகக் கன்றுகள் 40% மானியத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்கள் வழியாக வழங்கப்படும். ரூ.580 இலட்சம் நிதியில் 14,500 எக்டர் பரப்பளவில் இவ்வினம் செயல்படுத்தப்படும்.

<u>முந்திரி பதப்படுத்தும் நிலையம்</u> - சாகுபடி செய்யப்படும் முந்திரி விதைகளைப் பிரித்தெடுத்து ஏற்றுமதிக்கு ஏற்றவாறு பதப்படுத்திட சிறிய அளவிலான முந்திரி பதப்படுத்தும் நிலையம் அமைத்திட 35% மானியத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் நிதி உதவி வழங்கப்படும். மூன்று பதப்படுத்தும் நிலையங்கள் ரூ.36.75 இலட்சத்தில் அமைக்கப்படும்.

<u>முந்திரி உடைக்கும் கருவி</u> - சாகுபடி செய்த முந்திரி விதைகளை உடைத்திட முந்திரி உடைக்கும் கருவி 50% மானியத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் வழங்கப்படும். ரூ.12 இலட்சத்தில் 200 முந்திரி உடைக்கும் கருவிகள் வழங்கப்படும்.

<u>முந்திரி பிரித்தெடுக்கும் கருவி</u> - முந்திரி விதையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட முந்திரி பருப்புகளை ஏற்றுமதிக்கு ஏற்றவாறு தரம் பிரிக்கும் உபகரணங்கள் 50% மானியத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் வழங்கப்படும். ரூ.15.00 இலட்சத்தில் 50 முந்திரி பிரித்தெடுக்கும் உபகரணங்கள் வழங்கப்படும்.

<u>நிலப்போர்வை அமைத்தல்</u> – முந்திரித் தோட்டங்களில் நீர் மேலாண்மை செய்திடவும் நீர் பாசனத்திற்கான ஆட்தேவையினை குறைத்திட நிலப்போர்வை 50% மானியத்தில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தில் வழங்கப்படும். இவ்வினம் 368 எக்டர் பரப்பிற்கு ரூ.73.60 இலட்சத்தில் செயல்படுத்தப்படும்.

<u>மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்ட இனங்கள்</u>

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டக்கூறு | மானிய சதவீதம் | பொருள் (எக்டர்/ எண்கள்) | நிதி |
|---|---|---|---|---|
| 1 | முந்திரி பரப்பு விரிவாக்கம் | 40% | 795 | 143.10 |
| 2 | பழைய முந்திரித் தோட்டத்தினை புத்தாக்கம் செய்தல் | 40% | 2075 | 83.00 |
| 3 | நிலப்போர்வை அமைத்தல் | 50% | 368 | 73.60 |
| | மொத்தம் | | | 299.70 |

**ஒன்றிய மாநில அரசின் பகிர்வு நிதி திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் திட்ட இனங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டக்கூறு | மானிய சதவீதம் | பொருள் (எக்டர்/ எண்கள்) | மொத்த நிதி | ஒன்றிய அரசின் நிதி | மாநில அரசின் நிதி | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பரப்பு விரிவாக்கம் | 40% | 200 | 36 | 21.6 | 14.4 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | | 40% | 20 | 3.6 | 2.16 | 1.44 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |
| 2 | பழைய தோட்டங்களை புதுப்பித்தல் | 40% | 12,425 | 497 | 298.2 | 198.8 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 3 | முந்திரி உடைக்கும் கருவி | 50% | 200 | 12 | 7.2 | 4.8 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 4 | முந்திரி பிரித்தெடுக்கும் கருவி | 50% | 50 | 15 | 9 | 6 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 5 | முந்திரி பதப்படுத்தும் நிலையம் | 35% | 3 | 36.75 | 22.05 | 14.7 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | மொத்தம் | | | 600.35 | 360.21 | 240.14 | |

4. மேற்கண்ட வேளாண் நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண்.33-ல் காணும் தமிழ்நாடு முந்திரி வாரியத்தின் செயல்பாடுகள் குறித்த அறிவிப்பினை செயல்படுத்த ஒன்றிய மாநில அரசு பகிர்வு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளுக்கு அனுமதியும், மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அக்கருத்துருவினை ஏற்று:

i. தமிழ்நாடு முந்திரி வாரியம் மூலம் செயல்படுத்த உத்தேசித்துள்ள எட்டு திட்டக்கூறுகளில் பரப்பு விரிவாக்கம், பழைய முந்திரித் தோட்டத்தினை புத்தாக்கம் செய்தல், முந்திரி உடைக்கும் கருவி, முந்திரி பிரித்தெடுக்கும் கருவி மற்றும் முந்திரி பதப்படுத்தும் நிலையம் ஆகிய ஐந்து திட்டக்கூறுகள் ஒன்றிய மாநில அரசு பகிர்வு நிதியுதவியுடன் ரூ.600.35 இலட்சத்தில் இணைப்பு 1-இல் உள்ளவாறு செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கியும்;

ii. முந்திரி பரப்பு விரிவாக்கம், பழைய முந்திரித் தோட்டங்களைப் புத்தாக்கம் செய்தல் மற்றும் நிலப்போர்வை அமைத்தல் ஆகிய மூன்று திட்டக்கூறுகளை மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

செயல்படுத்திட இணைப்பு 2-இல் உள்ளவாறு, ரூ.299.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியும்;

iii. மேற்படி, ஒப்பளிக்கப்படும் நிதியினை, பிரத்தியேக வங்கிக் கணக்கிலிருந்து பெற்று வழங்கவும் (Draw and Disburse), இத்திட்டத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு விரைந்து சென்றடைய நிதி செலவினம் செய்வதற்கு ஏதுவாக IFHRMS-இல் காலாண்டு கட்டுப்பாட்டினைத் தளர்வு செய்யவும், மேலும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும் இனங்களின் நிதி இலக்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக் கொள்ளவும், அது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை (Guidelines) மாற்றி அமைத்துக் கொள்ளவும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினமான ரூ.299.70 இலட்சம் பின்வரும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | கணக்குத் தலைப்பு | நிதி |
|---|---|---|
| | **மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் திட்ட இனங்களுக்கான கணக்குத் தலைப்பு** | |
| 1 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 119 தோட்டக்கலையும் காய்கறி பயிர்வளர்ப்பும் – மாநிலச் செலவினங்கள் – BJ – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்ட மானியம். **(த.தொ.கு 2401-00-119-BJ-311-01)** | 239.760 |
| 2 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – AM – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்ட மானியம். **(த.தொ.கு 2401-00-789-AM-311-01)** | 56.943 |
| 3 | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 796 - பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் – மாநில செலவினங்கள் – AG – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 – மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். **(த.தொ.கு 2401-00-796-AG-311-01)** | 2.997 |
| | மொத்தம் | 299.700 |

7. மேலே பத்தி 5 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,99,70,000/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை

பெற்று வழங்கிட இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (வேளாண்மை-உ.ந. / வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. 2025 – 26 ஆம் ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முந்திரி வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் மூன்று திட்டக் கூறுகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையில் இணைப்பு III-ஆக இணைக்கப்பட்டுள்ளது.

9. இவ்வாணை நிதித்துறையின் 11.09.2025-ஆம் நாளிட்ட அ.சா.எண்.10481350/நிதி(வே-உ.ந)/2025-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2025091330.

(ஆளுநரின் ஆணைப்படி)

வதட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
கூடுதல் தலைமைச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இயக்குநர், முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குநரகம், ஒன்றிய அரசு, கொச்சி, கேரள மாநிலம்.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு வனத் தோட்டக்கழகம், திருச்சி-620101.
நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) கிண்டி, சென்னை–32.
துணை வேந்தர்/ பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
மண்டல இயக்குநர் மற்றும் உதவி பொது மேலாளர், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), நுங்கம்பாக்கம், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை – 5.
பேராசிரியர் மற்றும் தலைவர் – மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாநில விதைமேம்பாட்டு முகமை, சென்னை – 5.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின்
தனிச்செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை- 9.
நிதித் (வே.உ.ந.) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு.2/வ&தி) துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10481350/தோ.க.2/2025.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/9/25
பிரிவு அலுவலர்

17/9/25

## இணைப்பு-I

அரசாணை (நிலை) எண்.243, வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.2) துறை, நாள் 17.09.2025

### ஒன்றிய மற்றும் மாநில அரசின் பகிர்வு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள் மற்றும் அதற்கான நிதிதேவை விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | மொத்த நிதி | ஒன்றிய அரசின் நிதி | மாநில அரசின் நிதி | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பரப்பு விரிவாக்கம் | 200 | 36 | 21.6 | 14.4 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | | 20 | 3.6 | 2.16 | 1.44 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |
| 2 | பழைய தோட்டங்களை புதுப்பித்தல் | 12,425 | 497 | 298.2 | 198.8 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 3 | முந்திரி உடைக்கும் கருவி | 200 | 12 | 7.2 | 4.8 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 4 | முந்திரி பிரித்தெடுக்கும் கருவி | 50 | 15 | 9 | 6 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 5 | முந்திரி பதப்படுத்தும் நிலையம் | 3 | 36.75 | 22.05 | 14.7 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | **மொத்தம்** | | 600.35 | 360.21 | 240.14 | |

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

17/9/25
பிரிவு அலுவலர்

17/9/25

## இணைப்பு – II

**அரசாணை (நிலை) எண்.243, வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.2) துறை, நாள் 17.09.2025**

**மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்ட நிதியில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள் மற்றும் அதற்கான நிதித்தேவை விவரங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | நிதி |
|---|---|---|---|
| 1 | முந்திரி பரப்பு விரிவாக்கம் | 795 | 143.10 |
| 2 | பழைய முந்திரித் தோட்டத்தினை புத்தாக்கம் செய்தல் | 2,075 | 83.00 |
| 3 | நிலப்போர்வை அமைத்தல் | 368 | 73.60 |
| | **மொத்தம்** | | **299.70** |

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

17/9/25
பிரிவு அலுவலர்

17/9/25.

**இணைப்பு – III**

**அரசாணை (நிலை) எண்.243, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 17.09.2025**

**மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்ட இனங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

**முந்திரி பரப்பு விரிவாக்கம் - ரூ. 143.100 இலட்சம்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** முந்திரி சாகுபடி செய்யும் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தேனி, விழுப்புரம், திருச்சி மற்றும் இதர முந்திரி பயிரிடும் மாவட்டங்கள்.
- மொத்த செலவினம் - ரூ.45,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.18,000/ எக்டர்.
- நடவுப்பொருட்கள் செலவினம் போக மீதமுள்ள தொகை ஒருங்கிணைந்த உர/பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்களுக்கும், நிலம் தயாரித்தல், நடவு செய்தல் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற பணிகளுக்கும் வழங்கப்படும்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.
- தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் பின்பற்றப்படும் வழிகாட்டு நெறிமுறைகளின் படி செயல்படுத்தப்பட வேண்டும்.
- **இடைவெளி:** 7x 7m

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத்தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | முந்திரி செடிகள் (Cashew) | எண்கள் | 200 | 40 | 8,000 | - | 8,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை | | | | 4,000 | 13,000 | 17,000 |
| 3 | நிலம் தயாரித்தல், நடவு செய்தல், நீர்பாசனம் மற்றும் பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | | | | 6,000 | 14,000 | 20,000 |
| | **மொத்தம்** | | | | 18,000 | 27,000 | 45,000 |

**பழைய முந்திரித் தோட்டத்தினை புத்தாக்கம் செய்தல் - ரூ. 83.00 இலட்சம்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** முந்திரி சாகுபடி செய்யும் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தேனி, விழுப்புரம், திருச்சி மற்றும் இதர முந்திரி பயிரிடும் மாவட்டங்கள்.
- மொத்த செலவினம் - ரூ.10,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.4,000/ எக்டர்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.
- மரங்களை சீரமைத்தல் மற்றும் போக்குபோன இடங்களில் புதிய செடிகளை நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.
- தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் பின்பற்றப்படும் வழிகாட்டு நெறிமுறைகளின் படி செயல்படுத்தப்பட வேண்டும்.

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூபாய்/எக்டர்) | மானியம் (ரூபாய்/எக்டர்) | விவசாயியின் பங்களிப்பு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | காய்ப்பு குறைந்த முதிர்ந்த மரங்களை அகற்றி மறு நடவு செய்ய நடவுச் செடிகள் | 4,000 | 4,000 | - |
| 2 | கவாத்து செய்தல், நிலம் தயாரித்தல், நடவு செய்தல், நீர்பாசனம் மற்றும் பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள், ஒருங்கிணைந்த உர, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை | 6,000 | - | 6,000 |
| | **மொத்தம்** | **10,000** | **4,000** | **6,000** |

**நிலப்போர்வை அமைத்தல் - ரூ. 73.600 இலட்சம்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** முந்திரி சாகுபடி செய்யும் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தேனி, விழுப்புரம், திருச்சி மற்றும் இதர முந்திரி பயிரிடும் மாவட்டங்கள்.
- மொத்த செலவினம்-ரூ.40,000/எக்டர், 50 சதவீத மானியம்-ரூ.20,000/எக்டர்.
- ஒரு விவசாயி/ பயனாளி அதிபட்சமாக 2 எக்டர் பயன்பெறலாம்.
- தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் பின்பற்றப்படும் வழிகாட்டு நெறிமுறைகளின் படி செயல்படுத்தப்பட வேண்டும்.

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூபாய்/எக்டர்) | மானியம் (ரூபாய்/எக்டர்) | விவசாயியின் பங்களிப்பு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | நிலப்போர்வை அமைத்தல் | 40,000 | 20,000 | 20,000 |
| | **மொத்தம்** | **40,000** | **20,000** | **20,000** |

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

சா. கிருஷ்ணவேணி 17/9/25
பிரிவு அலுவலர்

மொழி 17/9/25